**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 245/மா/2023

**நாள்: 26.10.2023**

| | | |
|---|---|---|
| திரு.R.காதர்<br>வேலூர் | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>வேலூர் மாநகராட்சி | – | எதிர்மனுதாரர் |

வேலூர், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, 18/A1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.காதர் என்பவரின் 24.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.07.2023–ல் பெறப்பட்டு, 245/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர், சின்னஅல்லாபுரம் மெயின்ரோடு, 18/A1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.காதர் என்பவர் தனது 24.07.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" வேலூர் மாநகராட்சி சுமார்ட் சிட்டி திட்டத்தில் சில மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட நடைபாதை சில இடங்களில் தரமற்றதாகவும் மற்றும் கைபிடி வளையங்கள் வசந்தபுரம் மெயின்ரோடு, இரயில் கேட் அருகில், மற்றும் கஸ்பா பாலம் மெயின்ரோடு ஆகிய இடங்களில் காணாமல் போயும் சில இடங்களில் ஆங்காங்கே கைபிடி வளையம் உடைந்தும் காணப்படுகிறது. மேலும் சுமார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் சில மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மண்டலம்–04ல், கஸ்பா பாலம் மெயின்ரோடு தரமற்று குண்டும் குழியுமாக உள்ளது. கால்வாயில் உள்ள தண்ணீர் செல்வதற்கு பூச்சு வேலை செய்யாததால் தண்ணீர் போகாமல் தேங்கி உள்ளது. எனவே சுமார்ட் சிட்டி திட்டத்தில் வேலூர் மாநகராட்சியில் நடைபெற்ற அனைத்து திட்டங்களையும் ஆய்வு செய்து தரமற்ற முறையில் நடைபெற்ற

பணிகளான தார்சாலை, கைபிடி வளையம் போன்றவற்றை மறுபடியும் தரமானதாக அமைக்கவும் தரமற்ற முறையில் அமைக்கக் காரணமாக இருந்த பொறியாளர் மற்றும் தொடர்புடைய இதர அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து ஊழல் முறைகேடுகளை ஒழிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 14.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 17.10.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4) மனுதாரர் 17.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" வேலூர் மாநகராட்சி மண்டலம்–04ல், சுமார்ட் சிட்டி திட்டத்தில் சில மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட நடைபாதை தரமற்ற வகையிலும், கைப்பிடி வளையம் உடைந்த நிலையிலும் காணப்படுகிறது. மேலும் அங்கு அமைக்கப்பட்ட சாலையும் குண்டும், குழியுமாக மிகவும் பழுதடைந்துள்ளது. மழைக்காலங்களில் கால்வாய் வழியாக மழைநீர் செல்லாமல், சாலையில் தண்ணீர் தேங்கிவிடுகின்றது. இது குறித்து மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியவுடன், அங்கு ஏற்பட்டுள்ள பழுதுகள் 20 சதவீதம் மட்டுமே நீக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 80 சதவீதப் பழுதுகள் நீக்கப்படவில்லை.

எனவே, வேலூர் மாநகராட்சி மண்டலம்–02 மற்றும் 04ல், சுமார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலை, கைப்பிடி வளையம், போன்றவற்றை வேலூர் மாநகராட்சியால் மீண்டும் தரமாக அமைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) வேலூர் மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் 17.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள வேலூர் மாநகராட்சி வசந்தபுரம் மெயின் ரோடு, ரயில்வே கேட் அருகில், கஸ்பா பாலம் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் சாலை மற்றும் நடைபாதை, கைப்பிடி வளையம் போன்ற பணிகள் வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணிகள் ஒப்பந்ததாரரால் முடிக்கப்பட்டுவிட்டது. அதற்கான பட்டியல் தொகையில் 5 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு மற்ற தொகை ஒப்பந்ததாருக்கு அளிக்கப்பட்டுவிட்டது. தற்போது மேற்கண்ட பணிகளில் தார்சாலை, கைப்பிடி அமைத்தல் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட பழுதுகள் நீக்கப்பட்டுவிட்டன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து பணிகள் நடைபெற்றதற்கான புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) வேலூர் மாநகராட்சி துணை ஆணையர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

" வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் வசந்தபுரம் மெயின்ரோடு, ரயில்வே கேட் அருகில், கஸ்பா பாலம் மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட சாலை மற்றும் நடைபாதை, கைப்பிடி வளையம் போன்ற பணிகள் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திரு.P.ராதாகிருஷ்ணன் என்பவர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் திரு.R.காதர் என்பவர் புகாரில் தெரிவித்த அனைத்து குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டு; புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி துணை ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் சுமார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலை, நடைபாதை தரமாக அமைக்கப்படவில்லை என்றும் கைப்பிடி வளையம் உடைந்தும் காணப்படுகின்றன என்றும் எனவே மண்டலம் 02 மற்றும் 04ல் மீண்டும் தரமாக அமைத்திட கோரியுள்ளார்.

வேலூர் மாநகராட்சி வசந்தபுரம் மெயின்ரோடு, ரயில்வே கேட் அருகில், கஸ்பா பாலம் மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் சாலை மற்றும் நடைபாதை, கைப்பிடி வளையம் போன்ற பணிகள் வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணிகள் ஒப்பந்ததாரரால் முடிக்கப்பட்டுவிட்டது. அதற்கான பட்டியல் தொகையில் 5 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு மீதமுள்ள தொகை ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டுவிட்டது. தற்போது மேற்கண்ட பணிகளில் தார்சாலை, கைப்பிடி அமைத்தல் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட பழுதுகள் நீக்கப்பட்டு உள்ளது என்பதை மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

தேசிய சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart City) மத்திய வீட்டமைப்பு மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் 2015ல் தொடங்கப்பட்டது. அதன்படி முக்கியமாக உள்கட்டமைப்பு, தூய்மையான மற்றும் நிலையான சூழ்நிலை வழங்கும் நகரங்களை மேம்படுத்துதல் மூலம் குடிமக்களுக்கு மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை வழங்குதல் மேலும் நகர மேம்பாடு, நகரப் புதுப்பித்தல் மற்றும் நகர விரிவாக்கங்களும் அடங்கும். நடைபாதைகள், பாதசாரிகள் கடக்கும் பாதைகள், சைக்கிள் ஓட்டும் தடங்கள் அமைத்தல் திறன்வாய்ந்த கழிவு மேலாண்மை அமைப்புகள் உருவாக்குதல், ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை மற்றும் மதிப்பீடும் அடங்கும்.

8) வேலூர் மாநகராட்சி தேசிய சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் அனைத்து மண்டலங்களிலும் மேற்கொண்டுள்ள பணிகளில் குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அதனை பொதுமக்கள் மாநகராட்சிக்கு புகாராக தெரிவிக்கும் முன்னரே சரி செய்திடவும், மேலும் மேம்படுத்தப்பட்ட முக்கிய சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கிட நடவடிக்கைகளை

மேற்கொள்ளவும் வேலூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

9) 2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R.காதர்,
ஏண்.18/A1, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு,
இக்ராபள்ளி அருகில்,
வேலூர் – 632 001.

2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்